**அனுப்புநர்**

திரு.சா.சேதுராம வர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – **600 006.**

**பெறுநர்**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள், மற்றும் இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி.
2. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்

**ந.க.எண். 027018/எச்1/2021** **நாள் : 04.01.2022**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – 2021–2022ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு – +2 பள்ளி மாணவர்களுக்கான தேர்வுக் கட்டணம் மற்றும் TML கட்டணம் – ஆன்லைன் வழியாக செலுத்துதல் – சார்பு.

**பார்வை :**

1. அரசாணை எண் 237, பள்ளிக் கல்வி (வி1) துறை, நாள்: 21.09.2007.
2. அரசாணை (நிலை) எண்.68, பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (சிந2) துறை, நாள்:18.11.2021.
3. அரசாணை (நிலை) எண்.48, பள்ளிக் கல்வித் (ஜிஇ1)த் துறை, நாள்.11.04.2002.

*****

2021–2022ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதவுள்ள பள்ளி மாணவர்களிடமிருந்து (தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டவர்களைத் தவிர்த்து) தேர்வுக்கட்டணத் தொகையினை பெற்று, அத்தொகையினை ஆன்லைன் வழியாக பின்வரும் அறிவுரைகளைப் பின்பற்றி **05.01.2022 பிற்பகல் 2.00 மணி முதல் 20.01.2022** வரையிலான நாட்களுக்குள் செலுத்திட, தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கும் அறிவுறுத்துமாறு முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## தேர்வுக் கட்டணம் (Exam Fees)

| மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு | | | | | |
|---|---|---|---|---|---|
| வ.எண் | மாணவர் வகை | தேர்வுக் கட்டணம் | மதிப்பெண் சான்றிதழ் கட்டணம் | சேவைக் கட்டணம் | மொத்தம் (ஒரு மாணவருக்கு) |
| 1 | செய்முறை கொண்ட பாடங்களடங்கிய பாடத் தொகுப்பில் பயில்வோர் | ரூ.200/– | ரூ.20/– | ரூ.5/– | ரூ.225/– |
| 2 | செய்முறை இல்லாத பாடங்களடங்கிய பாடத் தொகுப்பில் பயில்வோர் | ரூ.150/– | ரூ.20/– | ரூ.5/– | ரூ.175/– |

**தேர்வுக் கட்டண விலக்கிற்கு தகுதியானோர்:**

| | |
|---|---|
| 1) | பார்வை 1–ல் காணும் அரசாணையின்படி தமிழை பயிற்று மொழியாகக் கொண்டு (Tamil Medium) தேர்வெழுதும் அனைத்து பள்ளி மாணவர்களுக்கும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. |
| 2) | கண்பார்வையற்றோர், காது கேளாதோர் மற்றும் வாய் பேசாதோர் ஆகிய மூன்று வகை மாற்றுத் திறனாளி மாணவர்கள் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. |
| 3) | அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் SC, SCA, SS, ST, MBC/DC இனத்தைச் சேர்ந்த மாணவர்கள் (தமிழ் வழி தவிர இதர பயிற்று மொழிகளில் (Other than Tamil Medium) பயில்பவராக இருந்தாலும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. |
| 4) | • பார்வை 2–ல் காணும் அரசாணையின்படி அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் BC, BCM இனத்தில் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2 1/2 இலட்சத்திற்கு (ரூபாய்.2,50,000) குறைவாக உள்ளவர்கள் (எந்த மொழி வாயிலாக பயின்றாலும் – Other than Tamil Medium) தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.<br>• **அரசு உதவி பெறும் (Aided) / பகுதி அரசு உதவி பெறும் (Partly aided) பள்ளிகளில், சுயநிதி பாடத்தொகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு மேற்குறிப்பிட்ட (வரிசை எண்.3 மற்றும் 4–ல் குறிப்பிட்டுள்ள) இந்தத் தேர்வுக் கட்டணவிலக்கு பொருந்தாது.** |

**முக்கிய குறிப்பு:**

- ❖ தேர்வுக்கட்டண விலக்கிற்கு தகுதியானவர்களில், செய்முறை கொண்ட பாடங்களடங்கிய பாடத் தொகுப்பில் பயில்வோருக்கு மொத்தக் கட்டணமாக ரூ.225/–ற்கும், செய்முறை இல்லாத பாடங்களடங்கிய பாடத் தொகுப்பில் ரூ.175/– ற்கும் முழுமையாக விலக்களிக்க வேண்டும்.

- ❖ **சுயநிதி / மெட்ரிகுலேஷன் மற்றும் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில் பயின்று +2 பொதுத் தேர்வெழுதும் மாணவர்கள் தேர்வுக் கட்டண விலக்கு பெறத் தகுதியுடையவர்கள் அல்லர்.**

**அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியல் கட்டணம் (TML Fees)**

பார்வை 3-ல் காணும் அரசாணையின்படி 2021–2022ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வின் தேர்வு முடிவுகள் அடங்கிய அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலை (TML) ஆன்லைன் மூலமாக பதிவிறக்கம் செய்து கொள்வதற்காக, அனைத்துப் பள்ளிகளும் (எந்த ஒரு பள்ளியும் விலக்கு இல்லாமல்) ரூ.300/– செலுத்த வேண்டும்.

**ஆன்லைனில் பள்ளித் தேர்வுக்கட்டணம் மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலுக்கான கட்டணம் செலுத்துவதற்கான வழிமுறைகள்**

| | |
|---|---|
| **STEP 1 :** | www.dge.tn.gov.in |
| **STEP 2 :** | **Online Portal for School and Educational Offices** |
| **STEP 3 :** | **School Login (School User ID & Password)** |
| **STEP 4 :** | **Exam Fees Payment for HSC XII**<br>**Or**<br>**TML Payment for HSC XII** |

ஆன்–லைன் மூலமாக கட்டணங்கள் செலுத்துவது தொடர்பாக ஏற்படும் சந்தேகங்களுக்கு பள்ளித் தலைமை ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் இயக்கக ஒருங்கிணைப்பாளரை (Co-ordinaters) தொடர்பு கொள்ளலாம்.

மேற்படி, தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்களையும், **2021–2022–**ஆம் கல்வியாண்டு மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விற்கான தேர்வுக் கட்டணம் (Exam Fees), அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலுக்கான கட்டணம் (TML Fees) ஆகியவற்றினை ஆன்–லைன் மூலமாக செலுத்திட அறிவுறுத்துமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ஒம்./–**
**இயக்குநர்**

**நகல்**

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
2. எ3 பிரிவு (அலுவலகம்) – தொடர் நடவடிக்கைக்காக.